**தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 06 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்கப் பேணப்படுதல், தயாரிக்கப்படல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ரூபா 30,159.85 மில்லியனாகும். அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 13,151.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தத் தேறிய நிதியில் ரூபா 17,008.55 மில்லியன் அதாவது 56.39 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,066.07 | 750.59 | 315.48 | 29.59 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 29,093,78 | 12,400.71 | 16,693.07 | 57.38 |
| மொத்தம் | 30,159.85 | 13,151.30 | 17,008.55 | 56.39 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 8.50 | 6.38 | 3.50 | 3.54 | 30.00 | 15.94 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் 02 வைப்புக் கணக்குகளது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 154.07 மில்லியனாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0016/0084/000 | 0.10 |
| 6000/0000/00/0020/0014/000 | 153.97 |
| **மொத்தம்** | **154.07** |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதியளவானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்குதல்

மீளாய்வாண்டிற்கென அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 டிசெம்பர் 10 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 332.89 மில்லியனாகும்.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு வேறுபாடு**

மூன்று செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியினது கூட்டுத் தொகை ரூபா 3,327.70 மில்லியனாகும். அந்நிதியேற்பாட்டைப் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டு நிதியை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் வழங்கியிருக்கவில்லை. இதன் காரணமாக, அந்த 03 செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 1,378.02 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த 03 செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாட்டில் 53.33 முதல் 78.16 சதவீதம் வரை சேமிப்புக்குள்ளாகியது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.3.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை. அமைச்சின் 2 உத்தியோகத்தர்களால் ரூபா 1,530,650 தவறானவாறு பெறப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,340,650 மாத்திரம் அவ்வுத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 190,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 3.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு

மீளாய்வாண்டின்போது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருந்தன. கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,906,200 கூட்டுத் தொகை அறவிடப்படவேண்டுமென கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தீர்மானித்திருந்த போதிலும், அத்தொகையை அறவிடுவதற்கு அமைச்சின் செயலாளர் மீளாய்வாண்டில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

#### 3.3.3 வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கை

2002 செப்டெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அமைச்சு அதன் செயல் முன்னேற்ற அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான செயல் முன்னேற்ற அறிக்கைகள் 2017 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்து முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

கொழும்பு தலைநகருடன் இணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பொருட்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம், 04 வகை கையடக்கத் தொலைபேசிகள், கணனி மொனிட்டர் போன்ற 04 பொருட்களில் குறைவு காணப்பட்டது. அவ்வாறே, செயற்திட்டத்தின் மூலம் கடைப்பிடிக்கப்படும் நலிவான பொருட் பட்டோலைக் கட்டுப்பாடு காரணமாக பெறுமதி மிக்க பொருட்களைப் பாதுகாப்பதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

**3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | |
| (அ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) | 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 0.75 | அமைச்சின் ஊடகச் செயலாளருக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 749,216 கூட்டுத் தொகை சம்பளமும் படியுமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் எந்தவொரு தினத்திலும் தான் வருவதையும் செல்வதையும் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதி செய்திருக்கவில்லை. |
| (ii) | 2016 மார்ச் 29 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | 0.75 | அமைச்சினது உத்தியோகத்தர்களுக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருள் விலைப்பட்டியல்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சின் கீழுள்ள கொழும்பு தலைநகரத்துடன் இணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் உபாய மார்க்க அபிவிருத்தி செயற்திட்டம் என்பவற்றினது நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை

-------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2011 டிசெம்பர் 24 ஆந் திகதிய 46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 10.83 | முழு நேர மற்றும் பகுதி நேர அடிப்படையில் செயற்திட்டப் பணிகளுக்கு விடுவிக்கப்பட்ட பதவியணியினருக்குச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 05 சதவீத, 15 சதவீத விசேட படி உரித்தாகாது. எனினும், கொழும்பு தலைநகரத்துடன் இணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு முழு நேர, பகுதி நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த பதவியணியினருக்கு அப்படி வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | செயற்திட்டக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 2 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டுமாயினும், கொழும்பு தலைநகரத்துடன் இணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் மீளாய்வாண்டில் ஒரு கூட்டத்தை மாத்திரமே நடாத்தியிருந்தது. |
| (iii) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | செயற்திட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள் 2 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டுமாயினும், உபாய மார்க்க நகர அபிவிருத்திச் செயற்திட்டம் மீளாய்வாண்டில் கண்காணிப்புக் குழு கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. அவ்வாறே, அக்குழுவின் பொருட்டு தொர்புடைய மாநகர சபைகள், நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்களது பிரதிநிதிகள் மேற்படி குழுவிற்கு நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. ஆகவே, மேலே குறிப்பிடப்பட்ட முகவர் நிலையங்களுக்கிடையே பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் செயற்பாட்டை இலகுவாக்கி அதன் மூலம் குழுக் கூட்டங்களின்போது ஆக்கபூர்வமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. |

## 3.6 வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின்போது வெளிநாட்டு நிதியுதவியுடன் 04 செயற்திட்டங்களை அமைச்சு அமுலாக்கியிருந்தது. கடனுக்கான உடன்படிக்கையின் பிரகாரம், அவற்றினது மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 77,741 மில்லியனாகும். மீளாய்வாண்டின்போது ரூபா 4,335.8 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு நிதியுதவியுடனான செயற்திட்டங்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கொழும்பு நகர்ப்புறத்துடன் இணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயலாற்றல்

கொழும்பு நகர்ப்புறத்துடன் இணைந்த வெள்ளநீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உதவி வழங்குதல் ஆகிய 2 உப பிரிவுகளின் கீழ் 59 நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்திட்டம் அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மீளாய்வாண்டின்போது அந்த உப பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் குறைந்த செயலாற்றலே அவதானிக்கப்பட்டதுடன், பின்வரும் குறைபாடுகளும் புலனாகின.

(i) வெள்ள நீர் மற்றும் நீர் முகாமைத்துவ உப உறுப்பின் கீழ் அமுலாக்கப்படவிருந்த ரூபா 43.03 அமெரிக்க டொலர்களுக்கு ஈடான ரூபா 5,636 மில்லியன் மதிப்பீட்டு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் ஒன்பதும் சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக தொடர்ந்தும் திட்டமிடல் கட்டத்திலேயே இருந்தன.

(ii) அமைச்சினால் செயற்படுத்தப்படும் கொழும்பு நகர்ப்புறத்துடன் இணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் நாளாந்தம் கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளை அகற்றுதல் மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பவற்றில் ஈடுபட்டிருந்தது. இந்தச் செயற்திட்டத்தின் உப உறுப்பின் (Sub Component) கீழ், திண்மக் கழிவு முகாமைத்துவத்தின்போது சுற்றாடலில் ஏற்படும் தாக்கத்தை மதிப்பிடும் அறிக்கையும் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவேண்டியிருந்தன. இதன் பொருட்டு சர்வதேச நிறுவனங்களின் உதவியைப் பெற்று மதியுரைக் கட்டணமாக ரூபா 65 மில்லியனுக்கும் அதிகமாக செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்வாறான செலவுடன் பெறப்பட்ட அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களையும் வழங்கப்பட்ட சிபார்சுகளையும் செயற்படுத்துவதற்காக அந்த அறிக்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கோ அல்லது அது தொடர்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கோ அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக, மதியுரை நிறுவனங்களது உதவியுடன் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவற்றை அமுலாக்க முடியாதிருந்தது. அதற்கமைய, மதியுரை நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 65 மில்லியன் பயனற்ற செலவாகியது.

(iii) செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 40 நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தமும் 11 மதியுரைச் சேவைகளுக்கான ஒப்பந்தமும் முறையே ரூபா 14,942 மில்லியன் மற்றும் ரூபா 151 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்தகாரர்களது நிதிசார் மற்றும் தொழில்நட்ப ஆற்றலை உறுதிப்படுத்தாது ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தமை, மதியுரையாளர்கள் தயாரித்த திட்டங்களில் நிலவிய நலிவுகள், திட்டங்களிலும் நோக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியமை,

முறையற்றவாறு மதிப்பீட்டைத் தயாரித்தமை மற்றும் நிர்மாண வேலைகளுக்கான நிர்வாகத்தில் நிலவிய நலிவுகள் போன்றவற்றால் அந்த ஒப்பந்தங்களது செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(iv) வெள்ள அபாயத்தைக் குறைவடையச் செய்வதற்கென பெத்தகான பலவித உயிரியல் பூங்கா அமைக்கப்பட்டிந்த போதும், வெள்ள அபாயத்தையும் சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பாய்வும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், முறையான ஆய்வின்றி பிரமாணப் பட்டியல் மற்றும் பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், முடிவடைந்த நிர்மாண வேலைகளை நிர்மாண வேலைகளுக்குப் பொறுப்பான மதியுரையாளர் சான்றுறுதிப்படுத்தாது செயற்திட்டத்தில் பணியாற்றிய ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்தியிருந்தார். அதன் விளைவாக, நிறைவேற்றியராத வேலைகள் மற்றும் தவறான கணிப்பீடு என்பவற்றால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 92 மில்லியன் கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) மட்டக்குளியில் பீச் பார்க்கை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை ரூபா 275 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்குவதற்காக 2014 செப்டெம்பர் 23 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம், 2015 யூலை மாதமளவில் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த ஒப்பந்தகாரரின் திறனின்மை காரணமாக 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒப்பந்தத்தின் பொருட்டு ரூபா 183 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பிரமாணப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட 47 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்காதிருந்தன.

(vi) பதினேழு ஒப்பந்தங்களுக்குரிய வேலைகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 4,553.75 மில்லியன் கிரயத்துடனான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் ரூபா 3,657 மில்லியன் கிரயத்துடனான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அதற்கமைய, யதார்த்தமற்ற மதிப்பீட்டைச் செயற்திட்டம் தயாரித்துமிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 30 ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 9,017 மில்லியன் கூட்டுத் தொகை கிரயத்துடனான ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், அந்த ஒப்பந்தகாரர்களது தொழில்நட்ப ஆற்றல் மற்றும் அவர்களது வளம் என்பன மதிப்பாய்வு செய்யப்படாது செயற்திட்டத்தால் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமையால் அந்த ஒப்பந்தங்களது வேலை முடிவுறும் காலம் 01 முதல் 14 மாத கால நீடிப்புக்குள்ளாகியன.

(vii) காலத்தையும் சேகரிக்கப்படும் வெள்ள நீரையும் முகாமைத்துவமிடும் முறைமை ஒன்றைத் திட்டமிடுவதற்கான மதியுரைச் சேவை ஒப்பந்தம் ஒன்றை செயற்திட்டம் செயற்திட்ட ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 4.98 மில்லியனுக்குச் சமமான 38,000 அமெரிக்க டொலர்களுக்கு வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், வேலைகளது செயல் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(viii) பேர வாவியின் கரையில் பூங்கா அமைத்தல் (கட்டம் II), தேவி பாலிகா வித்தியாலயத்திற்கு அருகே நீரோடைப் பாதையை நிர்மாணித்தல், மாதிவெல தெற்குக் கதவு (கட்டம் I) அபிவிருத்தி செய்யப்படுதல் மற்றும் கொலன்னாவை நகர சபைப் பிரதேச அபிவிருத்தி (கட்டம் I) போன்ற நிர்மாண வேலை நடவடிக்கைகளில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 சதவீத உருப்படிச் செயலாற்றலை அடைவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. காணிச் சுவீகரிப்பு

தாமதமாகியமையால் அத்தினத்தில் உள்ளவாறான உருப்படிச் செயல் முன்னேற்றம் 5 சதவீதம் மாத்திரமே ஆகியிருந்தது.

(ix) செயற்திட்டப் பணிப்பாளர், பொறியியல் நிபுணர் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர்கள் (பொருட் கொள்வனவு) மற்றும் திட்டமிடல் துறையினர் போன்ற செயற்திட்டத்தின் 04 பிரதான பதவிகள் ஆண்டு முழுவதும் வெற்றிடமாக இருந்ததுடன், நிபுணத்துவமுடைய பதவியணியினரது பற்றாக்குறை காரணமாகச் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் பாதிப்படைந்துமிருந்தது. அதற்குப் புறம்பாக, 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒரு நில அளவை உத்தியோகத்தர் என்போர் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின்போது அவர்களுக்கு ரூபா 06 மில்லியன் சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) உபாய வழிகளுடனான நகர அபிவிருத்திச் செயற்திட்டம்**

---

இச்செயற்திட்டத்தின் கீழான உறுப்புகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் சாத்தியக்கூறு ஆய்வு ஆவணத்தினது 10 ஆம் பந்தியின் பிரகாரம் மத்திய பெறுபேற்றைச் சுட்டிக் காட்டும் கூற்று தயாரிக்கப்படவில்லை. செயற்திட்டத்தின் சாத்தியக் கூறு ஆய்வு ஆவணத்தின் 33(ஊ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பொருட் கொள்வனவு நடவடிக்கைகளது செயலாற்றல் குறியீட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தின் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளது செயல் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யும் விதத்தில் செயற்திட்டத்தின் சாத்தியக்கூறு ஆவணத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொருட் கொள்வனவு நிர்வாகக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடனை வழங்கும் முகவர் நிலையம் இச்செயற்திட்டத்திற்கு வழங்கிய தொகை ரூபா 19,257 மில்லியனுக்குச் சமமான 147 அமெரிக்க டொலர்களாகும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகி 2½ ஆண்டு காலம் அதிகமான போதிலும் 7 சதவீதமான ரூபா 1,563.58 மில்லியனுக்குச் சமமான 11 அமெரிக்க டொலர்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தக் காலப்பகுதிக்குமென மாதாந்த, காலாண்டு, அரையாண்டு நிதிசார் மற்றும் உருப்படி இலக்குகளைக் குறிப்பிட்டு, குறித்த உத்தியோகத்தர்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் விதத்தில் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. இதன் காரணமாக, ஏற்பாடு செய்யப்பட்ட நிதி குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மேலும், செயற்திட்டத்தின் சாத்தியக்கூறு ஆவணத்தினது II ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான விரிவான வரவு, செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. இதன் காரணமாக, வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் மீளாய்வாண்டிற்கென எற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,810 மில்லியனில் ரூபா 1,624 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், கண்டியிலும் காலியிலும் தெரிவு செய்யப்பட்ட நகர்ப்புற வேலைகள் மற்றும் பொது நகர்ப்புற இடங்களை திருத்தியமைப்பதற்கு மீளாய்வாண்டின்போது பல நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்குச் செயற்திட்டம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. எனினும்,

மேலதிக நிதியளிப்பு வேலைத்திட்டத்தின்படி அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாண நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

(v) கட்டுகஸ்தோட்டை – மடவல – திகன வீதி மற்றும் கண்டி தர்மாசோக ஆகிய வீதிகளை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கான வேலைகள் 2016 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலின் காரணமாக, 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அந்நிர்மாண வேலைகளில் 27 சதவீத மற்றும் 9 சதவீத குறைவான செயலாற்றலே காணப்பட்டது. அவ்வாறே, கண்டி நகரில் நிலத்தடியில் 2 கிலோமீட்டர் நிளமான கழிவு நீர் பாதையை அமைக்கும் வேலையை 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அத்தினத்தில் உள்ளவாறான உருப்படிச் செயல் முன்னேற்றம் 25 சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்தது.

(vi) செயற்திட்டத்தின் நிறுவன ரீதியாகப் பலமளித்தல் மற்றும் சுற்றோட்ட அபிவிருத்தி உறுப்பின் கீழ் செய்ய வேண்டிய பணிகள் மற்றும் காலி மாநகரசபையின் உபயோகத்திற்கென பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் என்பன மீளாய்வாண்டின்போது அமுலாக்கப்படவில்லை.

(vii) செயற்திட்டத்தினது உப செயற்திட்டம் ஒன்றின் மூலம் கண்டி நகரில் அமுலாக்கிய 07 ஒப்பந்தங்கள் 4.07 அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 609.72 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படவிருந்தபோதும், ஒப்பந்தகாரரது நலிவான செயலாற்றலின் காரணமாக 2017 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அந்த உப செயற்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

(viii) கண்டி நகரில் அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஏனைய 07 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 17.96 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 2,690.11 மில்லியன் கிரயத்திலான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் இணக்கம் பெறப்படாமையால் அச்செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது அமுலாக்கி நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்த்த 5.73 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 858.26 மில்லியன் மதிப்பீட்டிலான 04 உப செயற்திட்டங்களை அமுலாக்க முடியாதிருந்தது.

(ix) செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 147 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 22,020 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்துடன் கண்டி மற்றும் காலி நகரங்களில் 76 புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்குரிய ஒப்பந்தங்களை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 34.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 5,190 மில்லியன் பெறுமதியுடைய 36 ஒப்பந்தங்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளில் குறைந்த செயல் முன்னேற்றமே பெரும்பாலும் காணப்பட்டதுடன், ஒப்பந்தகாரர்களது நிதிசார் சாத்தியக்கூறு மதிப்பாய்வு இல்லாது ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்தமை, ஒப்பந்தகாரர்கள் போதியளவு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை வேலையில் ஈடுபடுத்தாமை, திட்டமிடல் மதியுரையாளர்கள் தயாரித்த திட்டங்களில் நிலவிய வழுக்கள்

மற்றும் செயற்திட்டம் அறிவுறுத்துரைகளை வழங்குவதில் நிலவிய தாமதம் என்பன ஒப்பந்த வேலைகளது செயலாற்றல் நலிவுக்கு ஏதுவானது.

(x) கண்டி தர்மாசோக மாவத்தையைப் புனரமைத்தல் மற்றும் மெத எல பிரதேசத்தில் உள்ள கேகியன் மதகை நிர்மாணித்தல் போன்ற ஒப்பந்தத்துக்கான உடன்படிக்கையின் பிரகாரம், இடைக்கால விலைப்பட்டியலது பெறுமதி ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதத்திற்கு அதிகமாகக் குறைவடையக் கூடாது. எனினும், ஒப்பந்தத்துக்கான மொத்தப் பெறுமதியில் 5 சதவீதத்திற்குக் குறைவான பெறுமதியுடன் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலுக்கு அந்நிபந்தனையைக் கருத்திற் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(xi) செயற்திட்டத்தின் தெனுமடலாவ நீர்ச் சுத்திகரிப்பு இயந்திர சாதன நிர்மாண வேலை நடவடிக்கைகளது செயல் முன்னேற்றம் நலிவாக உள்ளதாக செயற்திட்ட மதியுரையாளர் அறிவித்திருந்தார். ஒப்பந்தகாரரின் செயலாற்றலைத் துரிதப்படுத்துவதற்கு அல்லது ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை செயற்திட்டம் மேற்கொள்ளவில்லை. மேலும், கண்டி நகரின் ஆத்தர் டெக் நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதில் 09 மாதகால தாமதம் நிலவியதுடன், தண்டப்பணமாக ரூபா 2.7 மில்லியனை அறிவிடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(xii) செயற்திட்டத்தினது மூல மதிப்பீட்டின் பிரகாரம், ரூபா 662 மில்லியன் மதிப்பீட்டில் 1,632 காணித் துண்டுகளைச் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 1,267 காணித் துண்டுகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் சுவீகரிக்கப்பட்டிருந்தன. காணி சுவீகரிப்புத் தாமதம் செயற்திட்டப் பணிகள் குறைந்த செயல் முன்னேற்றத்தை அடையக் காரணமானது.

(xiii) மீளாய்வாண்டின்போது காணிச் சுவீகரிப்புக்கென செயற்திட்டம் இழப்பீடாக வழங்கிய தொகை ரூபா 378.46 மில்லியன் ஆகும். 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் நியதிச் சட்டக் கொடுப்பனவாக வழங்க வேண்டிய ரூபா 83.08 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 295.38 மில்லியன் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றக் குழுவினது சிபார்சின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இழப்பீடு வழங்கப்பட்ட இக்காணி உரிமையாளர்களுக்கு மேலதிக இழப்பீடாக ரூபா 188.88 மில்லியன் வழங்கப்பட்டதற்கான காரணம் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்படவில்லை.

**(இ) பாரிய கொழும்பு பிரதேசத்தில் வெள்ள நீர்க் கட்டுப்பாட்டிற்கான நகரச் சுற்றாடல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

---

இச்செயற்திட்டத்தின் கீழான உறுப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(i) மீளாய்வாண்டினது இறுதியளவில் செயற்திட்டத்தினது தொழிற்பாடுகள் ஆரம்பமாகி ஏறக்குறைய 04 ஆண்டுகள் நிறைவடைந்திருந்தபோதும், அக்காலப்பகுதியின்போது ஏறக்குறைய 900,000 அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 118.30 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதியேற்பாட்டில் ரூபா 250,827 அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா

35.44 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டினது இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) கொழும்பு நகர்ப்புறத்துடன் இணைந்த வெள்ள அபாயத்தை மதிப்பீடு செய்தல், வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்கான வழிவகைகளைத் தயாரித்தலும் சிபார்சுகளைச் சமர்ப்பித்தலும், ஈரலிப்புப் பிரதேச பாதுகாப்புக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல், வறண்ட தரைக் காணிகளது நீரின் தன்மையையினையும் மண்ணையும் பரிசீலித்தல் என்பன நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான பணிகளாக மீளாய்வாண்டின் இறுதியளவில் நிறைவேற்றப்படவிருந்த போதும், அப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மதிப்பாய்வு முறைமையை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் மூலம் அமுலாக்கும் முகவர் நிலையங்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகளை 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், மிளாய்வாண்டின் இறுதியளவிலும், அது ஆரம்பிக்கப்படாதிருந்தது. இதன் விளைவாக, செயற்திட்ட முகாமைத்துவம், பொருட் கொள்வனவுகளுக்கான நிதித் தேவைக்கான தகவல் பரிமாற்றம், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், செயற்படுத்தல் போன்ற துறைகளை அமுலாக்குவதில் முகவர் நிலையங்களுக்கு நம்பிக்கை பொறுப்பால் ஒத்தாசை வழங்க முடியாமல் போனது.

(iv) முறையற்ற பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் காரணமாக வெள்ளக் கட்டுப்பாட்டு உபாய வழிகளைச் சிபார்சு செய்தல் மற்றும் அதற்கான செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் மதியுரைச் சேவை ஒப்பந்தம் 18 மாத தாமதத்தின் பின்னர் 2016 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, பொருட் கொள்வனவுத் திட்டத்திற்கமைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் 21 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

**(ஈ) கடவத்தை, கடுவெல, கொட்டாவ நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (3K)**

இச்செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பாரிய கொழும்பு போக்குவரத்து இணையதள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தித் துணைப் பாகமாகிய செயற்திட்ட அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே 31 ஆந் திகதியன்று செயற்திட்டம் நிறைவடையவிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்ட பணிகள் குறித்த காலப்பகுதியின்போது நிறைவேற்றப்படுவது இயலாதிருந்தது. மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தின் மொத்த மாதாந்த நிர்வாகச் செலவினம் ஏறக்குறைய ரூபா 1.4 மில்லியனாகவிருந்தது.

(ii) இச்செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளர் மற்றுமொரு செயற்திட்டத்திலும் செயற்திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றியமையால், தொடர்ந்தும் செயற்திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவது இயலாததொன்று எனத் தெளிவாக உணரப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டப் பணிப்பாளர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலிருந்து விலகியவாறு நகர அபிவிருத்திச் செயற்திட்டப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

(iii) செயற்திட்டத்துக்கு ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்கும் நிதி 2015 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்ட நடவடிக்கைகள் முற்றாகத் திறைசேரியின் நிதியின் மூலம் நடத்தப்படவேண்டியேற்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்திற்குத் திறைசேரி ரூபா 714.1 மில்லியன் நிதியேற்பாட்டை மேற்கொண்டிருந்தது. அதில் ரூபா 525 மில்லியன் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) பாரிய கொழும்பு போக்குவரத்து அபிவிருத்தி உறுப்பின் (SL-P-89) கீழ் இனங்காணப்பட்ட உப உறுப்புகளில் 03 ஆம் உப உறுப்பின் கீழ் மாக்கும்புற பல்வகை நிலையத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்தின் கீழ் புகையிரத மற்றும் பஸ் தரிப்பிடங்களை ஒரே இடத்தில் அமைத்து பிரயாணிகளின் பயண நேரத்தைக் குறைப்பதற்கும் நெரிசலைக் குறைப்பதற்குமென நோக்கம் கொண்ட பல்வகை போக்குவரத்து நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 845 மில்லியன் மதிப்பீட்டில் தனியார் கம்பனி ஒன்றிடம் 2015 மே 07 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம், 168 நாட்களுக்குள் நிர்மாண வேலைகள் முடிவடைய வேண்டுமாயினும், 2017 ஒப்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நிர்மாண வேலைகள் முடிவடையாதிருந்தன.

- 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 953 மில்லியன் உள்ளூர் நிதியிலும் கூடுதலாக ரூபா 18.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆயினும், போக்குவரத்து நிலையத்தை நிர்மாணித்தல், எஞ்சிய வேலைகளை நிறைவேற்றுதல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ விதிமுறைகளை நிறுவுதல் மற்றும் போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கிய 11 பணிகள் எஞ்சிய காலப்பகுதியில் நிறைவேற்றப்படவிருந்தன. அவ்வேலைகளுக்கு மதிப்பீட்டிலும் கூடுதலாக மேலும் ரூபா 431 மில்லியனைச் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**(உ) வெளி நாட்டு உதவியுடனான செயற்திட்டங்களில் உள்ளடங்கிய சில உப உறுப்புகளை அமுலாக்காமை**

---

பின்வரும் உப உறுப்புகளைச் செயற்திட்டம் அமுலாக்கவில்லை.

**(i) உபாய வழிகளுடனான நகர அபிவிருத்திச் செயற்திட்டம்**

---

2016 ஆம் ஆண்டின்போது அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 2,690.22 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்துடனான 07 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. ரூபா 858.29 மில்லியன் மதிப்பீட்டிலான 04 ஒப்பந்தங்களின் வேலைகள் ஆரம்பமாகவில்லை.

**(ii) கொழும்பு நகர்ப்புறத்துடன் இணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்**

---

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கால்வாய்ப் பாதையை புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக 88.5 மில்லியன் அமெரிக்க

டொலர்களுக்கு நிகரான ரூபா 11,598 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்துடனான 6 ஒப்பந்தங்களது விரிவான திட்டத்தினைத் தயாரிப்பதிலும் காணிச் சுவீகரிப்பிலும் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- கோட்டே பாதுகாப்பு அரண் பலநோக்கு உயிரியல் பூங்கா மற்றும் பேரெ வாவியில் நீண்ட தூரத்திற்கு லைனர் பார்க் (Liner Park) அமைப்பதற்குமான 4.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபா 576.4 மில்லியன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 உள்ளூர் நிதியளிப்பு மூலமான செயற்திட்ட அமுலாக்கல்

### 3.7.1 செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை நிலமீட்பு நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்**

2016 ஆம் ஆண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 361.87 மில்லியன் பெறுமதியிலான 13 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டங்களை அமுலாக்காது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 14 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு ரூபா 626.13 மில்லியனைச் செலவிட்டிருந்தது.

**(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபை**

வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் வரிசை அமைச்சினூடாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 22 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்காக ரூபா 3,252.9 மில்லியன் கூட்டுத் தொகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த 22 செயற்திட்டங்களும் அமுலாக்கப்படவில்லை. அதற்கமைய, தீவின் பல்வேறு மாகாணங்களிலும் செய்வதற்கிருந்த நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் அமுலாகாமையால் அச்செயற்திட்டங்களின் மூலம் பொதுமக்கள் பெறக்கூடியதாகவிருந்த நலன்களைப் பெறுவது தொடர்ந்து தாமதத்திற்குள்ளாகியது. அமுல்படுத்தப்படாத அச்செயற்திட்டங்களுக்கு நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இழப்பிற்குள்ளானது.

**(இ) டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கு கால்வாய்ப் பாதைகளையும் கழிவு நீர்ப் பாதைகளையும் சுத்திகரித்தல்.**

டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கு கால்வாய்ப் பாதைகளையும் கழிவு நீர்ப் பாதைகளையும் சுத்தஞ் செய்வதெற்கெனப் மீளாய்வாண்டின்போது குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 11.12 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின்போது கால்வாய்ப் பாதைகளையும் கழிவு நீர்ப் பாதைகளையும் சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் மொத்த நிதியேற்பாடும் சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

### 3.7.2 நிதி வழங்கப்பட்டபோதும் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டங்கள்

மாநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொழும்பு நகரில் நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவது மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் என்பவற்றிற்கு நகர்ப்புறத்துடன் இணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் உப உறுப்பாகச் செயற்பட்டிருந்தது. அதன் பின்னர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் வேறொரு செயற்திட்டமாகச் செயற்பட்டிருந்தது. இச்செயற்திட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின்போது ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் பொருட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் என பலவற்றிற்குச் சர்வதேச மதியுரை நிறுவனங்களது உதவி பெறப்பட்டிருந்தது. அதற்கென அந்நிறுவனங்களுக்கு மீளாய்வாணடின் இறுதியளவில் கொழும்பு நகர்ப்புற அபிவிருத்திச் செயற்திட்டத்தால் ரூபா 65.92 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மேற்கொண்டும் அந்நிறுவனங்களிடமிருந்து மேலதிக மதியுரை அறிக்கைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட மதியுரை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களும் சிபார்சுகளும் அமுல்படுத்தப்படுவதற்கோ அல்லது அது சம்பந்தமாக உள்ளூராட்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கோ செயற்திட்டம் தவறியிருந்தது.

(ii) மீளாய்வாண்டின்போதும் முன்னைய ஆண்டின்போதும் அமைச்சுக்கு ரூபா 4,000 மில்லியன் நிதியேற்பாடு திறைசேரியால் வழங்கப்பட்டிருந்தது. அத் திண்மக் கழிவு முகாமைத்துவச் சேவைகளை அமுலாக்கி அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்காததால், வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியில் 99.9 சதவீதமும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் செயல்திட்டத்தை அமுலாக்குவதற்குச் செயற்திட்டப் பணிப்பாளர் ஒருவர் முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உத்தியோகத்தர்கள் பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியில் நடைபெற்றிருந்தன.

(iv) அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியளவில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான ஆய்வு நடவடிக்கைகளுக்கு உத்தியோகத்தர்கள் வெளி நாடு சென்று அதன் பொருட்டு ரூபா 546,778 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த ஆய்வு நடவடிக்கைகளது அறிக்கைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) சுகித புரவர செயற்திட்டத்தின் கீழ் கொட்டாவை – மாலபே வீதியில் 760 மீட்டருக்குத் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்**

---

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடவத்தை, கடுவெல, கொட்டாவை நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் (3K செயற்திட்டம்) ஒப்பந்தப் பொதி இலக்கம் 04 இன் கீழ் கொட்டாவை மாலபே வீதியில் குலசெவனவத்த வீடமைப்புச் செயற்திட்டம் வரை வீதியின் இருபக்கங்களினது 1.35 கிலோமீட்டரை உள்ளூர் நிதியின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தற்பொது இவ்வீதி 3K செயற்திட்டத்தின் கீழ் 0.760 கிலோமீட்டர், அதாவது, கொட்டாவை போகஹ சந்தியிலிருந்து செவ்வாய்க்கிழமை வாரச்சந்தை வரை திருத்தஞ் செய்யப்படுவதற்கு ரூபா 226 மில்லியனிலான 2 செலவீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டின பிரகாரம், கழிவு நீர்ப் பாதையை அமைப்பதற்காக ரூபா 24 மில்லியனுக்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 3K செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டின் பிரகாரம், கழிவு நீர்ப்பாதையை அமைப்பதற்காக ரூபா 33 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மேற்படி இரு நிறுவனங்களும் நிர்மாணித்த கழிவு நீர் செல்லும் பாதை எது என்பதை இவ்விரு நிறுவனங்களும் கணித்திராமையால் அவற்றை வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தது. இதற்கமைய, ஒரே நிர்மாண வேலைக்கு இரு கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டிய அபாயம் நிலவியமையையிட்டு அமைச்சு முறைப்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) சுகித புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அடிப்படை வசதிகள் மற்றும் காணிச் சுவீகரிப்பு என்பவற்றிற்கு 05 அரச நிறுவனங்களுக்கு ரூபா 66,046,981 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2017 யூலை 11 ஆந் திகதியளவிலும் பாதைத் திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் 172 முற்புனைவு கழிவு நீர்ப் பாதை (Pre – Cast drain) தொதிகளும், 274 கழிவு நீர்ப் பாதை பாதுகாப்புச் சுவர்களும் (Slab) வேலைத் தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பற்றவாறு வைக்கப்பட்டிருந்தன.

(iii) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் இச்செயற்திட்டத்தினது உறுப்புகளின் உருப்படி முன்னேற்றம் 75 சதவீதமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2016 ஆம் ஆண்டிற்கான அமைச்சினது செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அத்திட்டமிடப்பட்ட பணிகளில் ஒரு தொகுதி காணியினது சுவீகரிப்பு மாத்திரமே நிறைவேறியிருந்தது.

(iv) இவ்வீதியில் 2 ஓட்டப் பாதைகளையும் வாகனங்களைத் தரித்து வைப்பதற்கு மேலதிக ஓட்டப் பாதைகள் இரண்டையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வீதியை 760 மீட்டர் அல்லது ¾ கிலோ மீட்டர் வரை விரிவு படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 346 மில்லியனாகும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூல மதிப்பீட்டு விலைக் கணிப்பின் பிரகாரம் இக் கிரயம் ஏறக்குறைய அதி கூடிய ரூபா 125 மில்லியனாக இருந்தது. அதற்கமைய, மதிப்பீட்டுக் கிரயம் சாத்தியமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 செயலாற்றல்**

2016 வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம், அமைச்சின் செயலாற்றல் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்**

இலங்கை நிலமீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் அமுலாக்கப்படவிருந்த கொழும்பு பிரதேசத்தில் வெள்ள நீரைத் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு செயற்திட்டம் மற்றும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் செயற்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டின்போது 2,360 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,010.75 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 57 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதுமானளவு நிறைவேறாத பிரதான பணிகள்**

விசேட செயற்திட்டம் சுகித புரவர - 2016 இன் கீழ் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் செயற்திட்டங்களுக்கு ரூபா 80 மில்லியனுக்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் ரூபா 20.1 மில்லியன் மதிப்பீட்டிலான 11 செயற்திட்டங்களும் கம்பஹா மாவட்டத்தில் ஜாஎல பிரதேச செயலகப் பிரிவில் அமுலாக்கப்படவிருந்த ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டிலான செயற்திட்டமும் அமுலாக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன. அவ்வாறே, அச் செயற்திட்டங்கள் சம்பந்தமாக சாத்தியக்கூறு ஆய்வோ அல்லது போதுமானளவு கண்காணிப்போ மேற்கொள்ளப்பட்டிராதமை அச்செயற்திட்டங்கள் மீதான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகின. விபரம் வருமாறு.

**(i) றுக்மலே மஹா வித்தியாலயத்தில் சூழவர மதிற்சுவரை அமைத்தல்**

இப்பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 500,000 ஆகும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 402,855 செலவாகியிருந்தது. இச்செயற்திட்டத்துக்குத் தேவையான மொத்த நிதியேற்பாடும் பெறப்படாமையால் மதிற்சுவரின் அரைப்பங்கு வேலை மாத்திரமே நிறைவடைந்து எஞ்சிய வேலை கைவிடப்பட்டிருந்தது. இதனால், இச்செயற்திட்டத்தின் நோக்கம் முறையாக நிறைவேறாது இதன் பொருட்டுச் செலவழிக்கப்பட்ட பணம் பயனற்றதாகியது.

**(ii) மஹரகம ஹொரஹேன வீதியில் 171 ஆம் இலக்க வீட்டிற்கருகே ஆரம்பித்து 175/7 ஆம் இலக்க வீடு வரையிலான வீதியைப் புனரமைத்தல்.**

இந்த உப செயற்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1,999,372 ஆகும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,941,689 செலவாகியிருந்தது. அந் நீரோடைப் பாதை கடுவெல பிரதேச செயலகப் பிரிவு வரை நிறைவேற்றப்பட்டிருந்தபோதும், கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நீரோடைப் பாதையுடன் அதனை இணைத்து பணியை நிறைவேற்றாமையால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற முடியாது போனது.

**(இ) செயற்திட்டத்தை இனங் காண்பதற்கு நிச்சயமான விதிமுறைகள் இல்லாமை**

அமைச்சினது திட்டமிடல் பிரிவாலும் நிதிப் பிரிவினாலும் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தினது பெயர் ஒன்றுக்கொன்று வேறுபட்டதால் செயற்திட்டத்தினது செயலாற்றலை மதிப்பிடும் சிரமம் உருவாகியிருந்தது. மேலும், நிதிப் பிரிவினது செயற்திட்டம் தொடர்பாகப் பயன்படுத்திய பெயரும் செயலாற்றல் அறிக்கையில் காணப்பட்ட பெயரும் வேறுபட்டதால் செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் உருப்படிச் செயலாற்றலை ஒப்பிட்டுப் பார்ப்பதில் சிரமம் ஏற்பட்டது. நிதிப் பிரிவு ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழும் வெவ்வேறு செயலாற்றலைச் சுட்டிக்காட்டியபோதும், திட்டமிடல் பிரிவு பல செயற்திட்டங்களை ஒரு செயற்திட்டமாகக் கருதி செயலாற்றலை மதிப்பாய்வு செய்திருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினது சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவ்வாறு புலனாகிய சில கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு.

(அ) சுற்றறிக்கையைத் தவறாகப் புரிந்து கொண்டு பொதுத் திறைசேரியின் அறிவுத்துரைகளுக்கு முரணாக கடவத்தை, கடுவெல, கொட்டாவ நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (3K செயற்திட்டம்) 10 உத்தியோகத்தர்களுக்கு சம்பள நிலுவையாக ரூபா 1,906,200 வழங்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறான இணக்கமற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட 5,203 வீடமைப்புக் கூறுகள் குறித்த நலன்பெறுநர்களுக்கிடையே ஒப்படைக்கப்படுகையில், ஒருவரிடமிருந்து ரூபா 100,000 வீதம் அறவிடுவதென அரசாங்கம் தீர்மானித்திருந்தது. எனினும், அவர்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை 2015 இடைக்கால வரவு, செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தால் வழங்கப்படுவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக அமைச்சினால் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிராததுடன் வீடமைப்பு செயற்திட்டத்தின் விற்பனைத் திட்டம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவில்லை.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினது சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

**(அ) மேல் மாகாண வலயரீதியான மாநகரத் திட்டத்தைத் தயாரித்தல்**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2004 ஆம் ஆண்டின்போது தயாரிக்கப்பட்ட மேல் மாகாண வலய ரீதியான மாநகரத் திட்டச் செயற்திட்டத்திற்கு 2003 முதல் 2005 வரை ரூபா 79.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தினது அடிப்படையானது காலத்திற்கு ஒவ்வாததால் புதிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்த் திட்டமிடப்பட்டது. இதன் காரணமாக, மாநகரத் திட்டத்தைத் தயாரிப்பதற்குச் செலவிட்ட ரூபா 79.85 மில்லியன் பயனற்ற செலவினமானியது.

(ii) மேல் மாகாண வலய ரீதியான மாநகரத் திட்டத் தயாரிப்பிற்குப் பொறுப்பான செயற்திட்ட அலுவலகத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட தொகையில் பல கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றிற்குப் புறம்பாக, மாதாந்தம் ரூபா 25,000 வாடகை அடிப்படையில் 03 கணனிகள் பெறப்பட்டுமிருந்தன. அவ்வாறே, ரூபா 9,500 வீதம் லெப்டொப் கணனிகள் வாடகைக்குப் பெறப்பட்டு அதன்பொருட்டு 2015 முதல் மீளாய்வாண்டு இறுதி வரை வாகன வாடகையாக ரூபா 721,450 செலவிடப்பட்டிருந்தது.

(iii) மேல் மாகாண வலய ரீதியான மாநகரத் திட்டச் செயற்திட்டத்தின் மேலதிக செலவுத் திட்டப் பணிப்பாளராக நியமனஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு கடமை நிமித்தம் அல்லது தனிப்பட்ட ரீதியில் செயற்திட்டத்தால் வாகனங்கள் வழங்கப்படலாகாதெனினும், சாரதியுடன் வாகனமொன்று அப்பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாகனத்திற்கான வாடகை, சாரதியின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் பயணச் செலவினம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தால் ரூபா 2,037,017 செலவிடப்பட்டிருந்தது.

(iv) மேல் மாகாண வலய ரீதியான மாநகரத் திட்டச் செயற்திட்டத்தினது உத்தியோகத்தர்களது வெளிநாட்டு பயணச் செலவினமாக ரூபா 9,454,858 கூட்டுத் தொகை செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்தில் சுற்றறிக்கைகளுக்கு முரணான கொடுப்பனவுகள், உரித்தற்ற கொடுப்பனவுகள் மற்றும் கூடுதலான கணிப்பீட்டுத் தொகை என்பன நிலவியமை 2016 ஒக்டோபர் 28 ஆந் திகதிய MMWD/F/02/WRM011 ஆம் இலக்க அமைச்சினது செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தெரிய வந்தது. அவ்வாறே, வானூர்தியில் வர்த்தக வகுப்பில் பயணஞ் செய்வதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்கு அவற்றில் பயணஞ் செய்வதற்கான அனுமதிச் சீட்டுக்களை கொள்வனவு செய்தமை, உத்தியோகத்தர்களது வெளிநாட்டுப் பயணங்களது நோக்கம் மற்றும் வெளிநாட்டுப் பயணத்தால் நாட்டிற்கு விளையும் நன்மை தொடர்பான தகவல்கள் இல்லாமை, வெளிநாட்டுப் பயணத்திற்குப் பின்னர் அது தொடர்பாகக் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்திராமை மற்றும் வெளிநாட்டுப் பயண படிக்கான சீவனப் படியைக் கணிப்பிடுவதில் நிலவிய குறைபாடுகள் என்பன நிலவின.

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகரத் திட்டத்தை வெளியிடுதல் தொடர்பான விழாவிற்கு மாத்திரம் செயற்திட்ட அலுவலகத்தால் ரூபா 7,844,183 சிக்கனமற்ற விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

அமைச்சு மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் முகாமைத்துவக் குறைபாடுகள் தெரிய வந்தன.

### (அ) நகர திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் பொருட்டு செயற்திட்டம் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிராமை

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினது நகர துணைப்பாக அபிவிருத்தி மற்றும் நகர திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவத்தின் பொருட்டு 162-

02-03-2502(16) எனும் செலவின விடயத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிதியேற்பாடு போதுமானதாக அமையாததால் குறை நிரப்பு மதிப்பீட்டு அதிகாரப் பத்திரம் 14 இன் மூலம் ரூபா 4,350.2 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினது இறுதியளவில் அந்நிதியேற்பாட்டில் ரூபா 3,330.8 மில்லியன் நகர துணைப்பாக அபிவிருத்தியின் பொருட்டு செலவிடப்பட்டிருந்தது. எனினும், மேல் மாகாணத்தின் முக்கியமானதும் அவசியமாகத் தேவைப்படுவதுமான திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் எதுவுமே செலவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வேரஸ்கங்கை செயற்திட்டம்**

இலங்கை நில மீட்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் வேரஸ் கங்கையில் மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் முன்னேற்றச் செயற்திட்ட அமுலாக்கலுக்கென தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடனாக ரூபா 14,000 மில்லியனைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அக்கடனில் ரூபா 2,550 மில்லியன் மீளாய்வாண்டின்போது பெறப்பட்டிருந்தது. அக்கடனுக்கு மீளாய்வாண்டின்போது செலுத்த வேண்டிய வட்டி மற்றும் தவணைப் பணங்களது ரூபா 726.54 மில்லியனை அமைச்சு உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த தினங்களில் செலுத்தத் தவறியிருந்தது. இதன் காரணமாக, எஞ்சிய மீதியான ரூபா 11,429 மில்லியனை வழங்குவதை வங்கி இடை நிறுத்தியிருந்தது. எதிர்காலச் செயற்திட்டச் செலவினத்தை வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் வருடாந்தம் வழங்கும் நிதியின் மூலம் மேற்கொள்ள வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது 162-2-3-9-2502(11) செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியேற்பாடாகிய ரூபா 1,000 மில்லியனில் 22 சதவீதத்திற்குச் சமமான ரூபா 218 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**(இ) பேரே வாவியைப் புனரமைத்து மீள அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

2016 ஒக்டோபர் 28 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பேரே வாவியைப் புனரமைத்து மீள அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கும் செயற்திட்ட நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காகக் காணியைப் பெறுவதற்கும் அவசர புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டியிருந்தது. அதன்பொருட்டு, ஆரம்பத்தில் ரூபா 1,350 மில்லியன் நிதியேற்பாடாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டுமிருந்தது. மீளாய்வாண்டின்போது அதில் ரூபா 1,200 மில்லியன் நகர அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. முறையாகக் கணிப்பை மேற்கொண்டு இறுதியாக மீளாய்வு செய்ததன் பின்னர் வீடுகளைப் பெறுவதற்கு உரித்தாகுபவர்களை நிச்சயமாக இனங்கண்டு, தேவையான நிதியேற்பாட்டை பெற்றிருக்க வேண்டுமாயினும், அவ்வாறல்லாது ஆரம்பக் களப் பரிசீலனைகளின் தகவல்களது அடிப்படையில் மாத்திரமே நிதியேற்பாட்டைக் கோரியமையால் கூடுதலான நிதியேற்பாட்டுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) மேல் மாகாண வலய நகர்ப்புறத் திட்டத்தைத் தயாரித்தல்**

மேல் மாகாண வலய நகர்ப்புறத் திட்டத்தைத் தயாரித்ததன் பின்னர், குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களது பரப்பெல்லை தொடர்பாக ஏற்படும் தாக்கத்தை நீக்குவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களோடு தொடர்புடைய கட்டளைச் சட்டங்களை மீளாய்வு செய்வது மேல் மாகாண வலய நகர்ப்புற அதிகாரசபையின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதற்கமைய, மேல் மாகாண வலய நகர்ப்புற அதிகாரசபையின் வியூகத்தைத் தீர்மானிப்பதற்கு வலய ரீதியாக மாநகர அதிகாரசபையை அமைக்கும் வரைவைத் தயாரிக்கவேண்டியிருந்தது. எனினும், அவ்வாறு செய்யாது கட்டிடத் திட்டப் பிரமாணங்களைத் தயாரித்தல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரத் திட்டத்தைத்

தயாரித்தல், ஹொரணை மற்றும் மீரிகமை தொழில்பேட்டைகளைத் திட்டமிடல் போன்ற திட்டங்களைத் தயாரிப்பதில் ஈடுபாடு செலுத்தப்பட்டிருந்தது. 2016 மார்ச் 10 ஆந் திகதிய அமப/16/321/724/016 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினது 1(ii) ஆம் பந்தியின் பிரகாரம் மேல் மாகாண வலய மாநகர அதிகார சபையை அமைப்பதற்குத் துரிதமாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பணிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், அந்த அமைச்சரவைத் தீர்மானம் பெறப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் ஓராண்டிற்கு மேலாகியும் மேல் மாகாண வலய மாநகர அதிகார சபையை அமைப்பதற்குத் தேவையான மூல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிடுதல்**

நகர அபிவிருத்தி சபையால் மத்திய மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்கு ரூபா 409 மில்லியன் கூட்டுத் தொகையான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்களின் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 8.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது அச்செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டமையால் செலவிடப்பட்ட ரூபா 8.2 மில்லியன் பயனற்றதாகியது.

**(ஊ) பொருட் கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

ஈரலிப்புத் தரை முகாமைத்துவத்திற்கான வழிவகைகளைத் திட்டமிடுதல் மற்றும் கொழும்பு நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள நீர்வழிப் பாதைகள் மற்றும் வாவிகளில் உள்ள நீரினது தன்மையைப் மதிப்பாய்வு செய்தல் போன்ற பணிகளுக்காக முகாமைத்துவக் கூறினால் சர்வதேச ரீதியாக மதியுரை நிறுவனங்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. செயற்திட்ட முகாமைத்துவக் குழுவினால் தயாரிக்கப்பட்ட மதியுரையாளர்களைத் தெரிவு செய்யும் விதிகளுக்கமைய தகைமைகளைப் பெற்ற முதலாவது நிறுவனத்திற்குக் குறித்த ஒப்பந்தத்தை வழங்காது, இரண்டாவது தகைமை வாய்ந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. தகைமையைப் பெற்றிருந்த முதலாவது நிறுவனத்தைத் தெரிவு செய்யாததற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.13 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 25 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 93 | 48 | 45 |
| (iv) | ஆரம்ப நிலை | 43 | 34 | 09 |
| (v) | ஏனையவை (சமயாசமய / ஒப்பந்த அடிப்படை / தற்காலிகம்) | 05 | 01 | 04 |
| | மொத்தம் | 176 | 110 | 66 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் மாநகரத் திட்டச் செயற்திட்டங்களுக்குத் தேவையான பதவியணியினரைத் தீர்மானித்தல், அப்பதவியணியில் ஒவ்வொரு பதவிக்கும் தேவைப்படும் தகைமைகளைத் தீர்மானித்தல், ஆட்சேர்த்தல், ஊதியத்தைத் தீர்மானித்தல் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் தெரிய வந்தன.

(i) செயற்திட்டங்களுக்குத் தேவையான பதவிகளையும் பதவியணியினையும் தீர்மானிப்பது தொடர்பாக முன் அங்கீகாரமோ அல்லது பின்னேற்பு அங்கீகாரமோ பெறப்படவில்லை.

(ii) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் சாதாரண விதி முறைகள் கடைப்பிடிக்கவில்லை.

(iii) செயற்திட்டங்களது பல்வேறு பதவிகளுக்கும் சம்பள அளவுத் திட்டத்தை எந்தவொரு அடிப்படையிலும் தயாரித்திருக்கவில்லை.

(iv) போதிய அனுபவமும் தொழில்சார் தகைமைகளையும் பெற்றிராத உத்தியோகத்தர்கள் உதவி மதியுரையாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டு அதி கூடிய சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

(v) செயற்திட்டத்திற்குச் ஆட்சேர்க்கப்பட்ட மதியுரையாளர்கள் மூலம் பெறப்பட்ட மதியுரைச் சேவை மற்றும் நிபந்தனைகள் (Terms of Reference) தயாரிக்கப்பட்டிராததுடன், சில மதியுரையாளர்களிடமிருந்து பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அறிக்கைகள் குறித்த திகதிகளில் செயற்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அது தொடர்பாக கவனஞ் செலுத்தியிராததுடன், அவர்களது மதியுரைச் சேவை ஒப்பந்தம் அவ்வவ்போது காலநீடிப்புக்குள்ளாகியுமிருந்தது.

(vi) அறுபது வயதைக் கடந்த உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தில் பணிகளில் அமர்த்தப்படுவதற்கு ஏற்பாடு இல்லாதபோதும், குறித்த செயற்திட்டத்திற்கு 60 வயதைக் கடந்த 04 உத்தியோகத்தர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

(vii) மாநகரத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான செயற்திட்டதிற்கு ஆட்சேர்க்கப்பட்ட மதியுரையாளர்களும் உத்தியோகத்தர்களும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படியாக ரூபா 2,500, ரூபா 4,000, ரூபா 10,000, ரூபா 30,000 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே சில உத்தியோகத்தர்களுக்கு காலை நேர மற்றும் மதிய நேர கூட்டங்கள் இரண்டும் வெவ்வேறாகக் கணிப்பிடப்பட்டு ஒரே கணிப்பிலமைந்த 2 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. ஒன்றுக்கொன்று வேறுபடும் படிகளைக் கொடுப்பனவு செய்வதற்கான அடிப்படை இல்லாதிருந்ததுடன், அப்படிகளை வழங்குவதற்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவுமில்லை.